30th March 1964]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தத் தகவல் எல்லாம் என்னிடம் இல்லை. இவைகள் எல்லாம் பரிசீலனையில் இருக்கிறது. இப்போது அவைகளை எல்லாம் ஆராய்ந்து சொல்வது சரியல்ல.

உயர்நிலைப் பள்ளிகளின் அலுவல் நாட்கள்

*** 456 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உயர்நிலைப்பள்ளிகளின் அலுவல் நாட்களை உயர்த்த வேண்டுமென்று மத்திய சர்க்கார் மாநில அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்து இருக்கின்றனரா ?

(இ) அப்படியானல், அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) :Yes

(b) The recommendation was considered in detail but was found not acceptable.

திரு. வை. சங்கரன் : இப்போது எவ்வளவு நாட்கள் வேலை நாட்களாக இருந்து வருகின்றன? இப்போது சமீபத்தில் இந்த நாட்கள் உயர்த்தப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆரம்பப் பள்ளிகளுக்கு 220 நாட்கள், உயர்நிலைப்பள்ளிகளுக்கு 200 நாட்கள், கல்லூரிக்கும் 200 நாட்கள். உயர்நிலைப் பள்ளியில் முன்னல் 180 நாட்களாக இருந்தது, அது இப்போது 200 நாட்களாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இது போதாது 220 நாட்களாக உயர்த்தவேண்டும், பரீட்சை எல்லாம் விரயமாக போகிறது, பலர் தவறி விடுகிருர்கள் என்று சொல்லப்பட்டது. இதைப்பற்றி ஆராய்ந்து பார்த்து, பிற்பட்ட தரத்துள்ள மாணவர்களுக்குப் பள்ளிக்கூட நேரத்திற்கு பின்னல் தனியாக கவனம் செலுத்தப்படுகிறது. அதோடு ஆசிரியர்கள் பாடங்களை திருத்திக்கொடுக்கவேண்டும், பாடம் தயார் செய்யவேண்டும். ஆகவே 200 நாட்களுக்கு மேல் உயர்த்துவது சரியில்லை என்று கருதி அதை அரசாங்கம் விட்டுவிட்டது.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, ஸ்டடி லீவ் என்று கொடுப்பதையும் சேர்த்து இதில் கணக்கிடப்படுகிறது என்று தெரிகிறது. ஆகவே இப்போது 200 என்றிருப்பதை 220 என்று கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்ளலாம் அல்லவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது பள்ளிகளைப்பற்றியது, கல்லூரிகளைப்பற்றி விவரங்கள் கொடுப்பதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

த்ரங்கத்ரா கெமிகல் ஒர்க்ஸ்

*** 457 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

த்ரங்கத்ரா கெமிகல் ஒர்க்ஸ் உப்புத் தண்ணீரால் ஆத்தூர் வட்டார நஞ்சை நிலங்களுக்கு ஏற்பட்டிருக்கும் சேதத்தைத்

[30th March 1964

தடுக்க சர்க்கார் மேற்கொண்டுள்ள நடவடிக்கையின் விவர மென்ன ?

THE HON. SRI P. KAKKAN : A statement[a] is placed on the table of the House.

இதுபற்றிய அறிக்கை[a] ஒன்று சபைமுன் வைக்கப்பட் டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், அறிக்கையில் குறிப்பிட் டிருக்கிறபடி, விவசாய இலாகா டாக்டர் அவர்கள் த்ராங்கத்ரா கெமிகல்ஸ் கம்பெனிக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிருர். அப்படியானுல் இந்த உப்புத் தண்ணீரால் பாதிக்கப்பட்ட நிலங்களை அப்புறப்படுத்துவதற்கு, எவ்வளவு காலம் ஆகும், எத்தனை ஏக்கர்களுக்கு நஷ்டஈடு கோரப்பட்டிருக் கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இப்போது இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், நுணுக்க அதிகாரிகள் பரிசிலனை செய்ததில், இப்போதுள்ள உப்புத் தண்ணீரின் காரண மாக சுமார் 3,000 ஏக்கர் வரை பாதகம் அடையும் என்று சொல்லி யிருக்கின்ற தகவல் உண்மையா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்களே, இதைப் பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. கலக்டர் அவர்கள் ஒரு ரிப்போர்ட்டை போர்ட் ஆஃப் ரெவினயூக்கு அனுப்பியிருக்கிருர். அதை அவர்கள் பரிசிலனை செய்த பின்னுல் அரசாங்கத்திற்கு அனுப்புவார்கள்.

Stipend to teacher trainees

* 458 *Q*.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to enhance the stipend amount paid to the students of the Teachers Training Schools; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்பச் செட்டியார் : இந்த ஸ்டைஃபண்ட் நிர்ணயிக்கும்போது இருந்த நிலை, இப்போதுள்ள நிலை எவ்வாறு இருக்கிறது என்பதை அரசாங்கம் அறியும். ஆகவே தற்போதுள்ள நிலையை உத்தேசித்து இந்த ஸ்டைஃபன்டை உயர்த்துவதற்கு அரசாங்கம் மறுபரிசிலனை செய்யுமா ?

---

[a] Printed as Appendix IV on pages 735–736.